*Paper presented at the Research Sessions 2003/2004, Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely, Sri Lanka, 11-12 December 2004*

# FOREIGN POLICY OF UNITED NATIONAL FRONT GOVERNMENT - A STUDY

## ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை - ஓர்ஆய்வு

**K.T.Ganeshalingham**
**Department of Political Science & Sociology, University of Jaffna.**

### Abstract

The United National Front's Government is trying to make its foreign policy in two dimensions. The first one is Developmental aspects of Srilankan economy and the Second one is the Srilankan National integrity , Sovereignty and Security of Nation. The Government of UNF Led by Ranil Wiekramasinha devised its foreign Policy in such a way that obviously supports the western stance in many aspects. As a result of this diplomatic move, the Srilankan Government is benefited in various ways. For Example the records indicate that there is a huge increase in the economical aids supplied by the western Countries to Srilanka. In the meantime, the coalition Government has resorted to a strategy convincing India that they accommodate the Indian security policy rather than western security policy. But the Srilankan Government is not prepared to incorporate any views suggested by Indian in their agenda of economic development.

### 1. அறிமுகம்

சுதந்திர இலங்கையின் வெளிநாட்டுக்கொள்கையில் 1977ஆம் ஆண்டு அரசாங்கம் இலங்கையை மேற்குலகத்துடன் இணைப்பதில் கணிசமான பங்கையாற்றியது. 1989 ஆம் ஆண்டு உலகில் ஏற்பட்ட மாற்றமும், பனிப்போர் முடியும் புதிய உலக அரசியல் ஒழுங்கு என்ற அரசியல் அத்தியாயத்தை தொடங்கியது. அமெரிக்கா தலைமையிலான UNIPOLAR ஒழுங்கை உருவாக்கியது. இவ் ஒழுங்கு செப்ரெம்பர் 11 (9.'.11) தாக்குதலுக்கு பின்னான மாறுதலினூடாக புதிய வியூகங்களை வகுத்ததுடன் அமெரிக்கப் பேரரசு (AMERICAN HEGEMONY) என்ற பேரசுவாதத்திற்கான திட்டமிடல்களுடன் உலகநாடுகளின் வெளிநாட்டுக்கொள்கைகளை உருவாக்க வழிவகுத்தது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் உலக நாடுகளைப் போன்று இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் புதிய அத்தியாயத்தை தொடக்கியது. இதற்கு அத்திவாரமாக இருபத்தியோராம் நூற்றாண்டு உதயமாகின்ற போது ஆட்சியிலிருந்து பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மேலோட்டமான கொள்கை ஒன்றை வரைந்தது. ஆனால் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் புதிய வெளிநாட்டுக் கொள்கைக்கு வடிகாலாக மாறியது. ஐக்கிய தேசிய முன்னணி வரைந்த வெளிநாட்டுக் கொள்கை இந்தியாவிலிருந்து எழக்கூடிய பிரதான சவாலை எதிர் கொள்வதும் அதனை முறியடிக்க கையாளும் இராஜதந்திரமும் முக்கிய அம்சமாக விளங்குவதுடன் மேற்குலகத்தின் ஒத்துழைப்புடன் விரைவான பொருளாதார அபிவிருத்தியை அடையும் நோக்குடன் செயல்படுகின்றது.

### 2. மூலத்தரவுகள்

அரசாங்கத்தின் அறிக்கைகள், வெளியீடுகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டும் அவை பற்றிய விமர்சனங்களை உள்ளடக்கியதாகவும் ஆய்வு அமைகின்றது. இவற்றைவிட சாத்தியப்பாடுடைய உலக நோக்குகளும் , அவை சார்ந்த அறிக்கைகளும் இலங்கையின் கொள்கையுடன் இயைபுபடுத்தப்படுகின்றது.

## 3. ஆய்வுமுறை

மொழியியற் பகுப்பாய்வைக் கொண்ட இவ்விவரணம் ஆய்வு சமூக விஞ்ஞான முறைமைக்கு உட்பட்டதாக வடிவமைக்கப்படுகின்றது. இவ்விவரண ஆய்வு (Descriptive Research) கண்டறிதல் வகை (Exploratory Type) சார்ந்த ஆய்வாக விளங்குகின்றது. அதாவது ஐ.தே.மு அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கைகளில் மறைந்துள்ள மூலக்கட்டமைப்புக்களை கண்டறிதலூடாக தகவல்களையும் யதார்த்தங்களையும் அதனால் ஏற்படப் போகும் விளைவுகளையும் புலமைசார் நோக்குக்கு உட்பட்டதாக வெளிப்படுத்த முயலுகின்றது.

## 4. கலந்துரையாடல்கள்

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் வெளிநாட்டுக்கொள்கை இரண்டு மிகப்பிரதான மூலங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. அவை இரண்டும் வெளிப்படையாகக் கூறப்பட்ட காரணங்களைக் காட்டிலும் மறைமுகமாக முன்னெடுக்கப்பட வேண்டிய தேசிய இறைமை , தேசிய ஒருமைப்பாடு , ஐக்கிய இலங்கை என்ற பாரம்பரிய எண்ணப்பாட்டுக்குள் இருந்து கொண்டு செயல்படுகின்ற போக்காகவே அமைகின்றது. வெளிநாட்டுக் கொள்கையை உலகிலுள்ள எல்லா நாடுகளுமே வகுக்கின்றபோது கடைப்பிடிக்கின்ற கோட்பாட்டு அம்சங்கள் பற்றி Vermpm Van Dyke குறிப்பிடுகின்றது போல் ஐ.தே.மு அரசாங்கமும் (A.Vandana: Pp 151- 152) அவற்றில் சிலவற்றை பின்பற்றி வெளிநாட்டுக் கொள்கை வகுப்பை உருவாக்கியுள்ளது.

### பொருளாதார அபிவிருத்தி

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை மீளவும் கட்டி வளர்ப்பதற்காக உருவாக்கிக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கை முதன்மையான அம்சமாகவுள்ளது. இதனை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் ஐ.தே.மு அரசாங்கத்தின் ஆட்சியாளர்கள் வெளிப்படையாக கூறி வருகின்றனர். பாராளுமன்ற விவாதம் ஒன்றில் அமைச்சர் டிரோன பெர்னான்டோ உரையாற்றும் போது இலங்கையில் தற்போதைய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை பொருளாதார விருத்தியை கட்டி வளர்க்கும் இலக்கோடு மேற்கொள்கின்ற கொள்கையாகவே அமைந்துள்ளது. (Hansard : P 1374) வர்த்தகம், சந்தைவாய்ப்பு, சந்தைக்கான உற்பத்தி, நுகர்வு என்பனவற்றை முதன்மைப் பிரிவுகளாகக் கொண்டு பல அமைச்சர்களை நியமித்துள்ளதாக டிரோன் குறிப்பிட்டிருந்தார். உலக நாடுகளுடன் வர்த்தகம், வரியற்ற வர்த்தகம் தொடர்பாகவே உடன்படிக்கைகள் பலவற்றை இலங்கையரசு கடந்த காலத்தில் மேற்கொண்டுள்ளது. இந்தியா, பாகிஸ்தான், சீனா, தாய்லாந்து, சிங்கப்பூர், மட்டுமல்லாது அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் (EU) நாடுகளுடன் வர்த்தக வாய்ப்புக்களை பெருக்குவதற்கு பலநடவடிக்கையை ஐ.தே.மு அரசு மேற்கொண்டு வருகின்றது. ஐக்கிய அமெரிக்காவுடன் இரட்டை வரிமுறை மற்றும் முதலீட்டு உடன்பாடு (Double Taxation and Investment Agreement) செய்யப்பட்டதும்; (Hansard P 1375) இருநாடுகளுக்கும் இடையே கட்டற்ற வர்த்தக உடன்பாடு (Free Trade Agreement) ஒன்றை மேற்கொள்ளுகின்ற நடவடிக்கையிலும் ஐ.தே.மு அரசு ஈடுபட்டு வருகின்றது. இஸ்லாமிய நாடுகளுடனும் அவற்றுடனான வர்த்தகத் தொடர்புகளையும் கையாளும் சந்தர்ப்பங்களில் இஸ்ரேலுடனான பொருளாதார, தொழில்நுட்ப, வர்த்தக உறவை பின்பற்றுவதில் இவ்வரசு அக்கறை கொண்டு செயல்படுகின்றது. இஸ்ரேலிய உறவு இராணுவ, அரசியல் மையப்படுத்தப்பட்டதென்ற குற்றச்சாட்டு வலுத்தாலும் அதற்கான வாய்ப்புக்களை ஐ.தே.மு அரசு பயன்படுத்த தவறவில்லை. இருந்த போதும் வர்த்தக அடிப்படையிலான இணக்கப்பாடுகளை இஸ்ரேலுடன் ஐ.தே.மு அரசு கொண்டிருக்கின்றது.

சார்க் அமைப்பு அரசியல் அசௌகரியத்தினால் தொழிற்பட முடியாது ஸ்தம்பித்துப்போயுள்ளது. அது இலங்கையையோ அல்லது தென்னாசிய நாடுகளையோ பொருளாதார வர்த்தக உறவின் அடிப்படையில் தொழில்பட முடியாத அளவுக்கு

முரண்பாடுகளைக் கொண்டிருக்கின்றது. உலக வர்த்தகத்தில் சார்க் நாடுகளுக்கிடையேயான வர்த்தகத்தின் பங்கு 3.5 சதவீதம் மட்டுமே. அவ்வாறு இந்நாடுகளுக்கிடையிலான ஏற்றுமதி 3.7 சதவீதமும் , முதலீடு 3.4 சதவீதமாகவும் அமைந்துள்ளதைக் காணலாம். (1999ம் ஆண்டு கணிப்பீடு) (Saman Kelegama : P 151) இதனால் சார்க் அமைப்பில் அதிகமாக நம்பிக்கையீனத்தைக் கொண்டிருக்கும் ஐ.தே.மு அரசாங்கம் சார்க் அமைப்பை பொருளாதார முன்னேற்றத்துக்கான அமைப்பெனக் கருதமுடியாதென திட்டவட்டமாகக் கூறியுள்ளது (Hansard : P 1376) இதனால் ஆசியான் மற்றும் பிராந்திய அமைப்புக்களுடன் பொருளாதார, வர்த்தக தொடர்புகளை தீவிரப்படுத்த முயலும் ஐ.தே.மு அரசு அதனூடக இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தியடையச் செய்யலாமென கருதுகின்றது.

**இந்தியாவுடனான உறவு**

இந்தியாவுக்கும், இலங்கைக்குமான பொருளாதார உறவு அரசியல் கலப்புடைய உறவாகவே அமைந்திருக்கின்றது. (Saman Kelegana : P.157) 1995 களுக்கு முன்னர் இலங்கையின் பாரிய இறக்குமதிக்கு பங்களிப்பு வழங்கிய நாடாக ஜப்பான் காணப்பட்டது. இது ~~1990~~ 200 களுக்கு பின்னர் அதாவது இலங்கை - இந்திய தடையற்ற வர்த்தக உடன்படிக்கைக்கு பின்னர் முற்றாக மாறிவிட்டது. இவ் உடன்படிக்கையால் இலங்கையில் சிறு கைத்தொழில் உற்பத்திகளை முற்றாக கைவிடும் நிலையை ஏற்படுத்தி இந்திய உற்பத்திப் பொருட்கள் இலங்கைச் சந்தையில் குவியத் தொடங்கியது. ஏற்கனவே ஜப்பான் வகித்து வந்த பங்கை இந்தியா தட்டிக்கொண்டது. இதனால் இலங்கைக்கு ஏற்பட்ட இழப்பு ஏறக்குறைய 837 மில்லியன் அமெரிக்க டொலர் (million USD) என்பதும் ஏற்றுமதியால் மட்டும் 169.2 மில்லியன் அமெரிக்கடொலர் இழப்பு என்றும் தெரியவந்துள்ளதுடன் இந்தியாவுக்கு வர்த்தக மீதியாக 667.8 மில்லியன் அமெரிக்க டொலர் (million USD) அதனால் கிடைத்துள்ளதென்பது (Champlka Liyanaarachchi : P,08) குறிப்பிட்டிருந்தது.

அடுத்து இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருக்கும் பிரதான சிக்கல் பாதுகாப்பு பொறுத்து உருவாகிவரும் நெருக்கடியாகும். இலங்கையின் பாதுகாப்பு சார்ந்த வெளிநாட்டுக் கொள்கை மிக அவசியமானதொன்றாக உள்ளது. இது ஒரு வகையில் அரசியல், இராஜதந்திரம், சமாதானம், இராணுவம் சார்ந்த அலகுகளோடு சம்பந்தப்பட்டதாக அமைகின்றது. ஐ.தே.மு அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையில் இந்தியா மிகப் பிரதான பாகத்தை வகித்திருந்தது. ஏனெனில் இலங்கையின் பொருளாதாரமும் பாதுகாப்பும், இந்தியாவின் வெளிநாட்டுக்கொள்கையில் தங்கியிருந்தது. (Saman Kelegama : P 162) இது இலங்கையின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கம் ஆட்சியிலிருந்த காலப்பகுதியிலேயே முழுமையான வளர்ச்சி நிலையை அடைந்துவிட்டது. இது ஐ.தே.மு அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடியாக மாறியிருக்கின்றது. இதனை முறியடிப்பதற்கு பல மாற்று அணுகுமுறைகளை ஐ.தே.மு அரசாங்கம் அவ்வப்போது பிரகடனப்படுத்தி வருகின்றது. உதாரணமாக தென் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பாலம் அமைக்கும் விவகாரத்தைக் குறிப்பிடலாம். இதனால் கூட்டான கைத்தொழில், தொழில்நுட்ப, விருத்திகள், வர்த்தகத் தொடர்புகள் அதிகரிக்கும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டாலும் அதனால் ஏற்படப்போகின்ற கலாசாரக்கடத்துகை, மக்களியல் கட்டமைப்பு, பாரம்பரியங்கள், விழுமியங்கள் போன்ற அம்சங்களும் பாரியளவில் இலங்கைக்குள் ஊடுருவ வாய்ப்பிருக்கும் Saman kelegama : Pp 163 – 164 ) இது தமிழ் மக்கள் வாழும் வடக்குப் பிரதேசத்துடன் (தலைமன்னார்) தொடர்புகளைக் கொள்ளுவதனால் வேறுபல விளைவுகளை ஏற்படுத்தலாமென தமிழ் புத்திஜீவிகள் கருதுகின்றனர். ஐ.தே.மு அரசாங்கம் சேது சமுத்திரத் திட்டத்திற்கு மாற்றாகக்கூட தென் இந்தியா – தலைமன்னார் பாலம் அமைக்கும் விவகாரத்தைக் கையாண்டிருக்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இந்தியாவை அலட்சியம் செய்கின்ற அரசியலை(Ignoring Politics) மேற்கொண்டது போல அல்லாமல் (Chanpika Liyanaarchchi,P:08) ஐ.தே.மு அரசாங்கமும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் சாதுரியமாக

இந்தியாவை அணுகும் வெளிநாட்டுக் கொள்கையை வகுத்துள்ளனர். இந்தியாவை உதாசீனம் செய்துவிட்டு ஜப்பான், அமெரிக்கா சார்ந்த மேற்கு நாடுகளுடனான நெருக்கத்தைக் கடைப்பிடிக்கும் வெளிநாட்டுக் கொள்கையை மேற்கொண்டு பிற்காலத்தில் பாரிய நெருக்கடியை ஜே.ஆர்.ஜெயவர்த்தனா எதிர் கொண்டார். இதனை மட்டுமல்ல இன்றைய கால உலகளாவிய அரசின் போக்கையும் புரிந்து கொண்ட ஐ.தே.மு அரசு மிகத்தந்திரமான வெளிநாட்டுக் கொள்கையை வரைந்துள்ளது.

புதிய உலக ஒழுங்கு என்பது 9.'.11 (Septe mber 11) தாக்குதலிற்குப் பின்னர் புதிய போக்கை உலக அரசியலில் ஏற்படுத்த ஆரம்பித்தது. வல்லரசாக விளங்கிய அமெரிக்கா உலக நாடுகளை மீளவும் அரசியல் இராணுவ வலைப்பின்னலுக்குள் உட்படுத்த பயங்கரவாதம் என்ற எதிர்வாத சித்தாந்தத்தை கையாளத் தொடங்கியது. இதற்குள் முகங்கொடுக்கின்ற பிராந்தியங்களுள் தென்னாசியாவும் ஒன்றாகும். தென்னாசிய அரசியலில் இந்தியா மைய நாடு. இலங்கைக்கு இந்தியா மட்டுமே மிக நெருங்கிய அயல்நாடு. இலங்கையும் இந்தியாவைப் போன்று உள்நாட்டு அரசியல் பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினையாக கருதுகின்றது. இதனால் இலங்கை - இந்திய அரசுகளிற்கிடையே அதிக தொடர்பும் இந்திய அரசின் செல்வாக்கு அதீதமாகவும் காணப்படுகின்றது. இதனால் வெளிப்படையாக இந்நிலையை நிராகரிக்காத ஐ.தே.மு அரசாங்கம் அதற்கு மாற்றீடாக மேற்கு சார்பான வெளிநாட்டுக் கொள்கையை வகுத்துள்ளது. (Hansard : P, 232) நேரடியாக அமெரிக்காவுடன் அதிக தொடர்புகளைக் கொண்டிருக்கும் ஐ.தே.மு அரசாங்கம் இராணுவ ரீதியான உடன்படிக்கைகளையும் அமெரிக்காவுடன் செய்துகொண்டது. அதாவது அமெரிக்கா இலங்கையின் கடல் மற்றும் வான் பரப்புக்களை பயன்படுத்துவதற்கான ஒப்பந்தம் (Sunday Times, 16.06.03) செய்ததுடன் அமெரிக்கக் கப்பல் பலவற்றை இலங்கையின் துறைமுகப் பகுதிகளுக்கு அடிக்கடி வருகை தருவதையும் அறியமுடிகின்றது. அவற்றுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் அமெரிக்காவின் கருசனை, உதவி வழங்கும் நாடுகளில் அமெரிக்கப் பங்கு எனப் பல விடயங்களைக் குறிப்பிடலாம் எல்லாவற்றிலும் முக்கியமாக அமைகின்ற விடயமாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் உலக யுத்தத்தில் முக்கியம் பெற்ற கடற்படைத் தளமாக விளங்கக்ககூடிய இயற்கைத்துறைமுகமான திருகோணமலையேயாகும். (S.D.Muni; P,27) இதனை இலக்காகக் கொண்டே அமெரிக்காவின் நகர்வும் அமைகின்றது. திருகோணமலையில் எண்ணைக் குதங்களை நீண்ட காலத்திற்குக் குத்தகைக்கு விடும் ஒப்பந்தம் ஒன்றை இலங்கை இந்தியாவுடன் செய்துள்ளது. இதனை சமநிலைப்படுத்த இலங்கை வடக்குக் கிழக்கு ஆழ் கடல் பகுதிகளில் சீனா மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்குரிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. சீனாவுடனான உறவைப் பற்றி ஐ.தே.மு அரசாங்கம் பாரளுமன்ற விவாதம் ஒன்றின்போது கூறியது இங்கு நினைவு கோரத்தக்கது.

இலங்கைக்கும் சீனாவிற்குமான உறவு பொருளாதார இராணுவ மட்டத்தில் பாரம்பரியம்மிக்கது. தேசிய பொருளாதாரத்திலும் தேசிய அபிவிருத்தியிலும் சீனாவின் உதவிகள் இலங்கைக்கு நீண்டகாலமாகக் கிடைத்துள்ளது. இலங்கையில் நிகழும் தற்போதைய சமாதான நடவடிக்கைகளின் தலைமைத்துவத்தனையும் முக்கியத்துவத்தையும் சீன அரசாங்கத்திற்கு தெரியப்படுத்துவதுடன் சீனாவின் ஆதரவை ஐ.தே.மு அரசாங்கம் கோரியிருந்தது. (Hansand : Pp 231 – 232 ) ஐ.தே.மு அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையில் ஏற்பட்ட பல மாற்றங்கள் பிராந்திய ரீதியாக சக்தியைச் சமநிலைப்படுத்துவதற்கான அணுகுமுறையாகவும் அவதானிக்கப்படுகின்றது. அது பொருளாதார, அரசியல் அர்த்தத்தில் அமைந்திருக்கின்றது என்பதையும் பாதுகாப்புச் சார்ந்த நிலையில் விடுதலைப் புலிகளின் கடற்படை வளர்ச்சியை மட்டுப்படுத்துவதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பு தேவைப்படுவதும் (Champka Ciyanaarchchi P ; 08) உணரப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி இந்திய அமெரிக்க நெருக்கமும் எதிர்காலத்தில் இப் பிராந்தியத்தில் இந்தியாவின் வளர்ச்சியும் ஐ.தே.மு அரசாங்கம் முற்றாக இந்தியாவை நிராகரிக்கின்ற கொள்கை வகுக்காது செயல்படுத்துவதற்கான காரணமாகவுள்ளது. குறிப்பாக இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்த பின்பு வெளிநாடுகளுக்கு 27 தடவை விஜயம் செய்துள்ளார். (20 October , 2003 ) அதில் 14 தடவை இந்தியாவுக்குப்

பயணம் செய்துள்ளார். தென்னிந்திய மாநிலங்களுடன் அதாவது கர்நாடகா, கேரளா, ஆந்திரா, தமிழ்நாடு ஆகியவற்றுடன் அதிக தொடர்புகளைப் பேணும் நோக்குடன் செயல்பட்டுவருகின்றார்.

## மேற்கு சார்பு

ஐ.தே.மு அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை மேற்கு சார்பானது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இதனைப் பாராளுமன்ற விவாதம் ஒன்றில் உரையாற்றும்போது வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டே இலங்கையின் இன்றைய வெளிநாட்டுக் கொள்கை மேற்குச் சார்புடையது. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் அமெரிக்க இலக்கம் 01 என்றும் அதன் பின்னரே ஏனைய நாடுகள் என்பதையும் குறிப்பிட்டிருந்தார். (Hansard :P 1352) விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சியின் பிரதான பேச்சாளருமான அனுராபண்டாரநாயக்கா முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் போன்றோர் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் மையமாக இந்தியாவே அமைந்திருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தனர். (ர்யளெயசன : P 1352) இதற்குப் பதிலளித்துப் பேசிய ஐ.தே.மு அமைச்சர்கள் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை, உள்நாட்டுப் பிரேணைகளுக்கும் தேசிய நலனுக்கும் (National interest) முக்கியத்துவம் கொடுப்பதுடன் தற்போது இலங்கையின் தேசிய நலன் பொருளாதா சுபீட்சத்திலேயே (Economic Prosperity) தங்கியுள்ளது. அத்தகைய தேசிய நலனை சாத்தியப்படுத்த மாறுதல் அடைந்துவரும் உலகஒழுங்கினைப் பயன்படுத்திக்கொள்கின்ற வெளிநாட்டுக் கொள்கையை வகுப்பதுடன் தேசிய நலனைச் சாத்தியப்படுத்த சமாதானமும் அவசியமானது (Ibid;1354) என்றும் குறிப்பிட்டனர்.

அந்தவகையிலேயே நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் கூடிய சமாதானத்தை ஐ.தே.மு அரசாங்கம் ஏற்றுச் செயல்படுகின்றது. சமாதன முயற்சி பற்றியும் நோர்வேயின் பங்களிப்புப் பற்றி வெளிவிவகார அமைச்சர் டிரோன் குறிப்பிட்டது நினைவு கூரத்தக்கது.

" I want to correct foreign Policy . Of course Norway who are facilitators. They are not mediators. They are not involved in the negotiations" (Hansard : P, 1373 )

" Norwagians winds were able to locate him and reach him not though military tactics but purely though political deplomatical measures". ( Tyrone Fernando : P. 81 )

In the case of the LTTE equality our primary purpose is to curb terrorism. (Liberation ) If not military by any other means without compromising the territorial integrity of the Country ( Hansard : p 1375 )

இத்தகைய கொள்கையைக் கொண்ட ஐ.தே.மு அரசாங்கம் கடந்த சமாதான காலத்தில் பொருளாதாரத்தில் கணிசமான விருத்தியைக் காட்டியுள்ளது. மேற்கு நாடுகளின் உதவிகளைப் பெற்றுள்ளது. பாரியளவிலான முதலீடுகள் சாத்தியப்பட்டுள்ளது. மேற்கு நாடுகளிலிருந்து பாரிய தொகையான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். (Ravi Perera : P. 08) இந்த ஆண்டின் முதல் அரைப் பகுதியில் நேரடி முதலீடு 170 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். கைத்தொழில் ஏற்றுமதி 23 சதவீதமாகவும் அதில் தைக்கப்பட்ட ஆடைகள் மட்டும் 18சதவீதமாகும். அதேபோல் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 2003 இன் முன்னரைப் பகுதியில் முதல் அரையாண்டிலும் 216000 பேர் வருகை தந்துள்ளமையும் அதனால் கிடைத்த வருமானம் 140 மில்லியன் அமெரிக்க டொலர் என்பதும் இது 2001ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 60சதவீத அதிகரிப்பைக் காட்டியுள்ளமையும். (Current Economics : P 09 ) குறிப்பிடத்தக்கதாகும்.

## 5. முடிவுரை

ஐ.தே.மு அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை பற்றிய எதிரணியினரின் குற்றச்சாட்டுகள் பல ஆட்சிக்கு நெருக்கடியை கொடுக்குமளவுக்குச் சென்றிருந்தது. குறிப்பாக மேற்கின் சார்புத் தன்மை என்பது அதீதமான தனியார்மயவாக்கத்தையும், சுரண்டலையும் ஏற்படுத்துமெனவும், உள்நாட்டின் பொருளாதார வளங்கள் அழிந்துவிடுமெனவும் கருத்துக் கூறின. மேலும் இலங்கையின் கலாசார மையங்கள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும், இலங்கை மக்களின் பண்பாடுகள் அழிக்கப்படுவதாகவும் குற்றம் சாட்டின. இதனால் எழுந்த நெருக்கடிகளையும் விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களையும் மேற்குசார்பான ஐ.தே.மு அரசாங்கம் மேற்கொண்டு இலங்கையை இரண்டாகப் பிரிக்கத் திட்டமிடுவதாகவும் எதிரணியினர் பிரச்சாரம் செய்தனர். அதனால் இந்தியசார்பான வெளிநாட்டுக் கொள்கையே இலங்கையின் பாதுகாப்புக்கும் ஐக்கியத்துக்கும் சாதகமானதாக அமையுமென அவை கருத்துக்கூறின. இதனை பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் பிரச்சாரப்படுத்தியதுடன் மேற்கு எதிரான இந்தியாவுக்கு சார்பான நிலையை இலங்கையில் திட்டமிட்டு வளர்ப்பதன் வாயிலாக ஐ.தே.மு ஆட்சியை ஆட்டங்காண வைக்கலாமென எதிரணியினர் கருதினர்.

ஐ.தே.மு அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை பொருளாதார அபிவிருத்தியையும் இலங்கையின் தேசிய பாதுகாப்பையும் மையப்பொருளாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அதில் இந்தியா, மேற்கு சார்பில் அமெரிக்கா பிரதான கொள்கை வகுப்பு சக்தியாக விளங்கின. இஇந்தியாவைப் பாதுகாப்புப் பொறுத்து அதாவது விடுதலைப் புலிகளிடமிருந்து வடக்குக் கிழக்கையும் அது சார்ந்த கடற்பரப்பையும் பாதுகாப்பதுடன் ஐக்கிய இலங்கையை உருவாக்குவதற்கு இந்தியாவை மட்டுமல்ல மேற்கு நாடுகளையும் சமாதான சூழலையையும் பயன்படுத்துகின்ற கொள்கையைக் கொண்டுள்ளது. பொருளாதார சுபீட்சம் ஐக்கிய இலங்கையை கட்டி வளர்ப்பதுடன் வடக்குக் கிழக்கின் போராட்ட இயல்பையும் அதற்குத் தலைமை தாங்கும் அமைப்பையும் தோற்கடிக்க முடியுமென ஐ.தே.மு அரசு கருதியது. அதேவேளை இந்தியாவின் அதீத தலையீட்டைத் தடுக்க சீனாவையும் பாகிஸ்தான் போன்ற சக்திகளையும் மேற்கின் உதவியையும் ஐ.தே.மு நாடியுள்ளது.

ஐ.தே.மு அரசின் வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு பகுதியான பொருளாதார அபிவிருத்தி ஓரளவு சாத்தியப்பாடுடையதாக மாறிவருகின்றது. அதனால் தென்னிலங்கையில் ஐ.தே.மு அரசு எதிர்க்கட்சிகளின் தீவிர எதிர்ப்பிற்கு மத்தியில் தாக்குப் பிடிக்கின்றது. ஆனால் பாதுகாப்புச் சார்பான கொள்கையில் பலவீனமான போக்கையே அது அடைந்துள்ளது. ஐ.தே.மு அரசு வகுத்த வெளிநாட்டு கொள்கைக்குப் பின்னரும் விடுதலைப்புலிகள் பின்பற்றி வரும் அணுகுமுறைகள் பெரும் நெருக்கடியைக் கொடுத்து வருகின்றது. அரசியல் இராஜதந்திரத்தில் ஐ.தே.மு அரசிற்கு சவாலாக விடுதலைப்புலிகள் வளர்ந்து வருவதும் இன்னோர் நெருக்கடியாக உருவெடுத்துள்ளது.

### அடிக்குறிப்புகள்

1. A.Vandana : Theory of International Politics, vikas publishing Hense PVT LTD New Delhi 1996 Pp 149 – 155, இந்நூலில் வெளிநாட்டுக் கொள்கையை ஒரு அரசாங்கம் வகுக்கின்றபோது பாதுகாப்பு , உள்நாட்டு அரசியல் பொருளாதார நிலை, எல்லையோர நாடுகுளின் பிரச்சினைகள் , அயல் நாடுகளில் காணப்படும் அரசியல் கொந் தளிப்புகள், கொள்கையை உருவாக்கும் அரசின் அமைவிடம், அவ்வரசு அமைந்தி ருக்கின்ற பிராந்தியத்தின் இராணுவரீதியான கேந்திர முக்கியத்துவம் என்பன கருத்தில் கொள்ளும் தன்மை சுட்டிக்காட்டப்படுகின்றது.

2. Hansard , Government publication , 25 November 2002Pp : 1352 – 1376. குறிப்பாக ஜி.எல்.பீரிஸ், மலிந்த மொறகொட, மகிந்த சமரசிங்ககிரிகல், ரவிகருன நாயக்கா போன்றவர்களைச்சுட்டிக்காட்டிஇவ்வமைச்சுக்கள்இலங்கையில் பொருளாதார விருத்தியை ஏற்படுத்துகின்ற நோக்கிலேயே தெரிவு செய்யப்பட்டனஎன்றார்.

3. Saman Kelegama , South Asian Regionalism and SriLanka , Pp 149 – 160 Rajan Philips (Ed) SriLanka , Global Challenges and national crises. Ecumenical Institute of study and Dialogue and Social ScientistsAssociation, 2001
4. Champlka Liyanaarachchi, "Indo – Lanka ties further strengthened dispite trade imbalance" Daily mirror, August 20, 2003 P, 08
5. Hansard, Government Publication , 01 April 2003 Pp 231 – 232
6. S.D.Muni , Issues in Indo-us Relations. World Focus, Monthly Discussion Journal, vol.24 , NU ,4-5 April – May ,2003 New Delhi , Pp 24 – 29
7. Tyronne Fernando P.C.MP , A New look at SriLanka's Foreign Relations though the Ages, Vikas House PVT LTD, New Delhi 2002 Pp 80 – 83.
8. Ravi Perera : Foreign Policy : Non –alignment or Pro – economy? Dailymirror 09th October, 2003 P. 08.
9. Current Economics : New Optimism in the economy and Prospects of higher growth P : 09, Daily mirror 16, September 2003